# ஓய்வுநாள்

ஓவன் டி. ஆல்பிரைட்

"ஓய்வுநாள்" (Sabbath) என்பது, *Shabbath* என்ற எபிரெய வார்த்தை மற்றும் *Sabbaton* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது "நிறுத்தி வைக்க, இடைவிட மற்றும் ஓய்ந்திருக்க" என்று அர்த்தப் படுகின்றது. "Sabbath" என்பது மோசேயின் காலம் தொடங்கி இஸ்ரவேல் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த விசேஷித்த ஓய்வுநாட்களுக்குத் தரப்பட்ட பெயராக இருந்தது. வாராந்தர ஓய்வுநாட்களில் நேரப்படியாக வெள்ளி மாலை 6.00 மணி முதல் சனி மாலை 6.00 மணி வரையிலும் இளைப்பாறுதல் கேட்டுக் கொள்ளப்பட்டது. "ஓய்வு" என்பது முதன் முதலாக யாத்திராகமம் 16:23ல் காணப்படுகின்றது, ஆனால் ஒரு ஏழாம் நாள் ஓய்வுடன் தொடர்பாக இது ஆதியாகமத்தில் பயன்படுத்தப்படுவதே இல்லை.

யூதர்கள் வாராந்தர ஓய்வுநாட்களைப் பெற்றிருந்ததுடன், பாவ நிவர்த்தியின் நாளான விசேஷித்த ஓய்வுநாட்களையும் (லேவி. 16:29-31; 23:27-32) கொண்டிருந்தனர், மற்றும் அவர்கள் ஒவ்வொரு ஏழாம் ஆண்டிலும் ஓய்வு ஆண்டைக் கடைப்பிடிக்கும்படியும் கட்டளையிடப் பட்டிருந்தனர் (யாத். 23:10, 11; லேவி. 25:1-7; உபா. 15:1-11). ஓய்வுநாட்கள் என்று அழைக்கப்படாதிருப்பினும் மற்ற சில சந்தர்ப்பங்களிலும் வேலைகள் நிறுத்தி வைக்க வேண்டும் என்ற அதே உத்தரவுடன் ஒதுக்கி வைக்கப் பட்டன: பஸ்காவின் முதல் நாள் மற்றும் ஏழாம் நாள் (எண். 28:18); வாரங்களின் பண்டிகையின் முதல்நாள், இப்பண்டிகை அறுப்பின் பண்டிகை மற்றும் பெந்தெகொஸ்தே என்றும் அழைக்கப்பட்டது (லேவி. 23:21; எண். 28:26); எக்காளப் பண்டிகையின் போது (லேவி. 23:24, 25; எண். 29:1, 7, 12, 35); மற்றும் கூடாரங்களின் பண்டிகையின் போது (லேவி. 23:35, 36).

ஆதியாகமத்தில் ஏழாம் நாள் ஓய்வுக்கான ஒரே குறிப்பானது 2:3ல் காணப்படுகின்றது: "தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்த படியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." தேவனுடைய மக்களுக்குப் பல ஆண்டுகள் கழித்துத்தான் ஓய்வுநாள் கட்டளையிடப்பட்டது. நெகேமியா பின்வருமாறு கூறினார்:

> நீர் சீனாய் மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளை களையும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்

படுத்தி, ... கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப் பிரமாணங்களையும் கற்பித்தீர் (9:13, 14).

எசேக்கியேல் பின்வருமாறு எழுதினார்:

> ஆகையால் நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணி, அவர்களை வனாந்தரத்தில் அழைத்து வந்து, என் கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்து, என் நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான். நான் தங்களைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன் (எசே. 20:10-12).

இது உபாகமம் 5:15ல் மோசேயின் கூற்றினை எதிரொலிக்கின்றது: "நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்.'' இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருந்து வந்தபிறகு சீனாய் மலையில் அறிவிக்கப்பட்ட ஓய்வுநாள் பிரமாணமானது தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையின் அடையாளமாய் இருந்தது (யாத். 31:13, 16, 17; எசே. 20:12).

சீனாய் மலையில் ஓய்வுநாளின் வெளிப்படுத்துதலுடைய தயாரிப்புக்காக ஆறாம் நாளில் தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கூடுதலான மன்னாவைக் கொடுத்தார் (யாத். 16:23-30). இஸ்ரவேலர்கள் ஏழாம் நாள் முழுவதும் பயன்படுத்தப் போதிய மன்னாவை ஆறாம் நாளிலேயே சேகரித்துக்கொண்டு ஓய்வுநாளன்று தங்கள் வாசஸ்தலங்களிலேயே தங்கியிருக்க வேண்டியதாயிற்று. மோசே, "பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டு நாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம் நாளில் உங்களில் ஒருவனும் தன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்க வேண்டும்" (யாத். 16:29) என்று விளக்கினார்.

## பத்துக் கட்டளைகளில் ஓய்வுநாள்

பத்துக் கட்டளைகளில் ஓய்வுநாள் பற்றிய மூன்று முக்கிய அம்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன (யாத். 20:8-11).

(1) ஓய்வுநாள் என்பது முழுமையான இளைப்பாறுதலின் நாளாய் இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களாலோ, வேலைக்காரர்களாலோ, விலங்குகளாலோ, விருந்தினர்களாலோ அல்லது இஸ்ரவேல் இனத்துடன் சேர்ந்து கொண்ட எந்த மக்களாலோ எவ்வேலையும் செய்யப்படக் கூடாது (வ. 8-10; உபா. 5:12-15).

*(2) தேவன் ஏழாம் நாளை Sabbath ஆக, அதாவது ஒரு ஓய்வுநாளாகத் தேர்ந்து கொண்டார், ஏனென்றால் அவர் அந்த நாளிலே ஓய்ந்திருந்தார். "கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத். 20:11).*

*(3) ஓய்வுநாள் என்பது தேவன் இஸ்ரவேலரை எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து விடுவித்ததைக் கொண்டாடுதலில் நினைவுகூருதலாகவும் ஓய்வுக்கான ஒரு சிறப்பான நாளாகவும் இருந்த வகையில் அவர்களுக்கு அது ஒரு நினைவுகூருதலின் நாளாக இருந்தது. ''நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்'' (உபா. 5:15).*

*தேவன் தாம் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியால் அதைத் தேர்ந்து கொண்டார், ஆனால் அவர் தமது படைப்புத் தொழிலைக் கனப்படுத்தும் வகையிலோ அல்லது ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்ததைக் கனப்படுத்தும் வகையிலோ அதை ஒரு நினைவு நாளாகப் பிரித்து வைக்க வேண்டும் (பரிசுத்தமாக்கி) என்று அவர் எவ்விடத்திலும் கட்டளை கொடுக்கவில்லை. ஓய்வுநாள் என்பது இஸ்ரவேலுக்கு ஒரு சிறப்பான ஆராதனை நாள் என்பது பற்றி ஏதொன்றும் கூறப்படவில்லை.*

*அவர்களை அவர் அடிமைத்தனத்திலிருந்து வெளிக் கொண்டு வந்ததன் நினைவாகத் தேவன் தம்முடைய மக்களுக்கு இந்த நாளைக் கொடுத்தார் என்ற உண்மையானது அவர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதற்கு முன்பு அது கொடுக்கப்பட்டிருக்க முடியாது என்று அர்த்தப்படுகின்றது. மற்றும், அவர்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்த நானூறு ஆண்டுகளில் அவர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்திருக்க முடியாது என்பது பெரும்பாலும் உறுதியாகும் (ஆதி. 15:13; அப். 7:6).*

## *படைப்பின் போது ஓய்வுநாள் கொடுக்கப்பட்டதா?*

*தேவன் படைப்பதை விட்டொழித்தபொழுது அந்த நாளிலிருந்து ஏழாம் நாளை மனித குலம் கடைப்பிடிக்கும் (ஓய்வு) நாளாக ஆக்கி யிருந்தார் என்று ஆதியாகமம் 2:1-3 போதிக்கின்றதா? இவ்வசனப் பகுதியை முதலாவதாக நோக்குகையில், படைப்பிலிருந்தே ஓய்வுநாள் பிரமாணம் அமலில் இருந்ததாக நாம் முடிவு செய்திருக்கலாம். இருப்பினும் அப்படிப்பட்ட ஒரு முடிவானது தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்த பிறகு அவர்களுக்கு ஓய்வுநாளை ஒரு நினைவுகூருதலின் நாளாகக் கொடுத்தார் என்ற உண்மையைக் கவனிக்கத் தவறுகின்றது. அது, படைப்புக் குப் பல ஆண்டுகளுக்குப் பின்பே மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்ற*

*உண்மையையும் காணாது விடுகின்றது.*

*குடியுரிமைத் தலைவர்களில் ஒருவரும், 1968ல் கொலை செய்யப்பட்ட வருமான மார்ட்டின் லூத்தர் கிங் Jr. அவர்களின் பிறந்த நாளானது அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட் கிழமையன்று கொண்டாடப்படுகின்றது. கிங் அவர்களின் வரலாற்றை எழுதும்போது வரலாற்றாளர், அவர் 1929, ஜனவரி 16ல் பிறந்ததாக எழுதியிருக்கலாம், பின்பு ஒரு சிறப்பான நாளானது கிங்கின் பிறந்த நாளை மதிக்கும் வகையில் தனிப்படுத்தப்பட்டது என்று ஒரு குறிப்பை அவர் சேர்த்திருப்பார். அவர் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு 1983 நவம்பர் 2ல் ஜனாதிபதியாய் இருந்த ரொனால்டு ரீகன் ஜனவரி மூன்றாம் திங்கட் கிழமையை கிங்கின் பிறந்த நாளைக் கனப்படுத்த ஒரு தேசீய நாளாக்கும் சட்டத்தில் கையெழுத்திட்டதை விளக்கியிருக்க அவசியமில்லாதிருந்தது.*

*இந்த வரலாற்றாளர் செய்துள்ளது போலவே, மோசேயும் பின்னோக்கிப் பார்த்தார். படைப்பு மற்றும் ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தது ஆகியவை பற்றிக் கூறிய பிறகு, தேவன் அந்த நாளை ஓய்வு நாளாக ஆக்கியிருந்தது பற்றி அவர் (மோசே) எடுத்துரைத்தார். அவ்வேளையில் அது எவரொருவராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியிருந்ததில்லை. பிற்பாடு, இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த பின்பு சீனாய் மலையில் தேவன்* Sabbath *நாளை ஒரு அவசியமான ஓய்வுநாளாக ஏற்படுத்தினார் என்று மோசே எடுத்துரைத்தார் (உபா. 5:15).* Sabbath *என்பது இவ்வேளையில் அறியப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்துவதாக ஆயிற்று என்பதை வேதத்தின் மற்ற வசனங்களும் உறுதிப்படுத்துகின்றன (நெகே. 9:13, 14; எசே. 20:10-12).*

*பின் கண்ணோட்டம் கொண்ட இவ்வகையான எழுதுதலானது பழைய ஏற்பாட்டின் மற்ற பாகங்களிலும் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக, ஆதாமும் ஏவாளும் பெற்றோராவதற்கு முன்பே, ஒரு மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் (ஆதி. 2:24) தன் மனைவியோடு இசைந்திருக்க வேண்டியது ஏன் என்பதை மோசே விளக்கினார். ஆதாம் தனது மனைவிக்கு, அவள் குழந்தை எதையும் பெறும் முன்னரே "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்'' என்று அர்த்தப்படுகின்ற ''ஏவாள்'' என்று பெயரிட்டு அழைத்தார் (ஆதி. 3:20).*

*பல இடங்கள் தங்கள் பெயர்களைப் பெறுவதற்கு முன்னர் விசேஷித்த பெயர்களினால் அழைக்கப்பட்டும் உள்ளன. எடுத்துக்காட்டாக "பெத்தேல்" என்ற இடமானது இப்பெயரைப் பெறுவதற்கு முன்னமே (ஆதி. 12:8; 13:3) "பெத்தேல்" என்ற பெயரினால் குறிப்பிடப்படுகின்றது (ஆதி. 28:19). அது போலவே, பெயர்செபா (ஆதி. 21:14) அது "பெயர்செபா" என்று அழைக்கப்படுவதற்கு முன்பும் (ஆதி. 21:31), ஓர்மா (எண். 14:45) அது "ஓர்மா" என்று அழைக்கப்படுவதற்கு முன்பும் (எண். 21:3), கில்கால் (உபா. 11:30; யோசுவா 4:19, 20) அது ''கில்கால்'' என்று அழைக்கப் படுவதற்கு முன்பும் (யோசு. 5:9), தாண் அது "தாண்" என்று அழைக்கப் படுவதற்கு முன்பும் (உபா. 34:1; யோசு. 19:47; நியா. 18:29) மற்றும் எருசலேம் (யோசு. 10:1) அது இன்னமும் ''எபூஸ்'' என்று*

பெயரிடப்பட்டிருந்த வேளையிலும் (நியா. 19:10) இப்பெயர்களால் அழைக்கப்பட்டிருந்த வசனக் குறிப்புகளை நாம் காண்கின்றோம்.

இஸ்ரவேலர்கள் அடிமைத்தனத்தினின்று வெளியேவந்தபொழுது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பத்துக் கட்டளைகளில் Sabbath என்ற ஓய்வு நாளானது ஒரு பாகமாய் இருந்தது. தேவன் இந்த உடன்படிக்கையை அவர்களின் முந்திய தலைமுறையினர் எவருடனும் ஏற்படுத்தவில்லை என்று மோசே வலியுறுத்தினார் (உபா. 5:1-3). இவ்விதமாக, ஓய்வுநாள் பிரமாணமானது ஆதாம் ஏவாளுக்கோ அல்லது இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியேறும் வரைக்கும் வேறு எவருக்குமோ கொடுக்கப் படவில்லை.

## ஓய்வுநாளானது ஆராதனைக்காகக் கொடுக்கப்பட்டதா?

ஏழாம் நாளை ஆராதனைக்கான ஒரு விசேஷித்த நாளாகத் தேவன் தனிப்படுத்தி வைத்தார் என்று ஆதியாகமம் கூறுவதில்லை. தேவன் தமது கிரியைகளை விட்டு ஓய்ந்திருந்தார், ஆனால் ஏழாம் நாளில் ஆராதனை செய்ய வேண்டும் என்று அவர் கட்டளையிடவில்லை (ஆதி. 2:1-3). பத்துக் கட்டளைகளைக் கொடுத்ததில், தேவன் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவித்ததை நினைவுகூருவதற்கு அவர்கள் ஓய்ந்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்; ஆனால் ஆராதனையைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை (யாத். 20:8-10; உபா. 5:12-15).

ஓய்வுநாளில் ஆராதிப்பதற்குச் சாத்தியமான ஒரே குறிப்புரைகள் எசேக்கியேல் மற்றும் ஏசாயா ஆகிய தீர்க்கதரிசன நூல்களில் காணப் படுகின்றன. எசேக்கியேல் 46ல் யூதர்களின் யுகத்தினுடைய ஆராதனை பற்றிக் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் அது எசேக்கியேல் கவிதை மொழி நடையில் விவரிக்கும் ஒரு தீர்க்கதரிசனமாக மட்டுமே உள்ளது. இது கிறிஸ்தவ ஆராதனைக்கான ஒரு நேரடியான குறிப்பாக இருப்பதில்லை. இது கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளில் ஆராதிக்க வேண்டும் என்று நிரூபிப்ப தாயிருந்தால், இது கிறிஸ்தவர்கள் (எருசலேம்) தேவாலயத்தில் ஆராதிக்க வேண்டும் (வ. 1), அமாவாசைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் (வ. 1, 3), ஆசாரியர்களின் மத்தியஸ்தத்தின் வழியாக ஆராதிக்க வேண்டும் (வ. 2), தகன பலிகளைச் செலுத்த வேண்டும் (வ. 2-7), யூதருடைய பண்டிகை களைக் கடைப்பிடிக்க வேண்டும் (வ. 9-12), அன்றாட பலிகளைச் செலுத்த வேண்டும் (வ. 13-15), மற்றும் விடுதலையின் ஆண்டைக் கடைப்பிடிக்க வேண்டும் (வ. 16-18) என்றும் போதிக்கின்றதாக உள்ளது.

எசேக்கியேலின் தரிசனமானது யூதர்களின் நடைமுறைகளை முன் நிழலாகப் (எபி. 10:1) பயன்படுத்திய யூத தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசன, உருவக மொழி நடையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவைகள் கிறிஸ்தவ யுகத்தின் நடைமுறைகளுக்கு முன் நிழலாக உள்ளன. இதே வழி முறையில், வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகமும் கூட யூதர்களின் ஆராதனைக் கூறுகளை கிறிஸ்தவ ஆராதனையின் அடையாளங்களாகப்

பயன்படுத்துகின்றது.

ஏசாயா 66ம் அதிகாரமானது ஓய்வுநாளில் மட்டுமே தேவனுக்கு ஆராதனை ஏறெடுக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைப்பதில்லை. இவ்வசனப் பகுதியானது, “அப்பொழுது, மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுது கொள்வார் களென்று கர்த்தர் சொல்லுகிறார்” (வ. 23) என்று கூறுகின்றது. ஒவ்வொரு ஓய்வுநாள் தோறும் மக்கள் தேவனுக்கு முன்பாகத் தொழுது கொள்ளுவார்கள் என்று ஏசாயா கூறவில்லை. “ஓய்வுநாள் தோறும்” என்று கூறியதில் அவர்கள் ஓய்வுநாட்களுக்கு இடையிலும் தொழுது கொள்வார்கள் என்றே அவர் அர்த்தப்படுத்தினார்.

இது, ஒரு ஆண் பெண்ணிடம், “நீ என்னைத் திருமணம் செய்து கொண்டால், புத்தாண்டு நாள்தோறும் மற்றும் ஞாயிறுதோறும் உன்னை ஒரே விதமாக நேசிப்பேன்” என்று கூறுவதற்கு ஒப்பிடப்படலாம். அந்த ஆண் அப்பெண்ணை அந்த நாட்களில் மட்டும் நேசிப்பதாக அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் அவர் அந்த நாட்களிலும் அதற்கு இடைப்பட்ட ஒவ்வொரு நாளிலும் நேசிப்பதாகவே அர்த்தப் படுத்துகின்றார். தேவன் தொடர்ந்து கனப்படுத்தப்படுவார் என்றே ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அர்த்தப்படுத்திற்று.

இவ்வசனப் பகுதியானது கிறிஸ்தவ யுகத்தில் ஓய்வுநாளானது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று போதிக்கிறதென்றால், இது கிறிஸ்தவர் யூதர்களின் விசேஷித்த நாட்களான அமாவாசைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் போதிப்பதாக உள்ளது. (ஆனால்) இது மக்கள் அமாவாசைகளையும், ஓய்வுநாள் தோறும் ஓய்வையும் அல்லது ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஆராதனையையும் கடைப்பிடிப்பார்கள் என்று கூறுவதில்லை. மாறாக, இது அவர்கள் தேவனுக்கு முன்பாகத் “தொழுது கொள்வார்கள்” என்று கூறுகின்றது, இது அவர்கள் தேவனை வாரந்தோறும் கனப்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிவார்கள் என்பதற்குச் சுட்டிக் காட்டுதலாக உள்ளது.

ஓய்வுநாளானது “பிரித்து வைக்கப்பட்டது” என்று அர்த்தப்படும் “பரிசுத்தமுள்ளதாக” (யாத். 20:8; 31:14, 15) இருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். அது பிரித்து வைக்கப்பட வேண்டிய வழிமுறையானது கட்டளையில் விளக்கப்பட்டது:

> ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் (யாத். 20:9, 10).

மேலும் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்,

*ஆறுநாளும் வேலை செய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வு நாளில் வேலை செய்கிறவன் எவனும் கொலை செய்யப்பட வேண்டும் (யாத். 31:15).*

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிக்கும் வழிமுறை யாதெனில், அந்நாளில் வேலை செய்வதை விட்டுஒழித்து அதை ஒரு ஓய்வுநாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதேயாகும். ஆராதனை மற்றும் பலி, இஸ்ரவேலரின் அன்றாடச் செயல்பாடுகள் ஆகியவை ஓய்வுநாளுடன் திட்டவட்டமாக இணைக்கப்படவில்லை.

ஓய்வுநாளில் இஸ்ரவேலர்கள் ஆராதிப்பதற்காகச் சபையாராக ஒன்றுகூட வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை. பாரம்பரிய "ஓய்வுநாள் பயணத்தின்" வரையறைக்குட்பட்ட பயணத் தொலைவின் காரணத்தினால் (ஏறக்குறைய ஒரு மைலில் ஐந்தில் மூன்று பாகம்), எருசலேமில் அல்லது அதற்கு அருகில் இருந்தவர்கள் மட்டுமே ஓய்வுநாளில் ஆராதனைக்காகக் கூடி வர முடிந்திருந்தது.

தேவன் இஸ்ரவேலருக்குப் பத்துக் கட்டளைகள் கொடுத்துப் பல ஆண்டுகளுக்குப் பிறகே ஓய்வுநாளான்று பொதுக் கூடுதலுக்கான நாளாயிற்று. தேவாலயம் அழிக்கப்பட்டு, யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்ட பொழுது, வேத வசனங்களை வெளிப்படையாக வாசிப்பதற்காக ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டன. "நாடு கடத்தப்பட்ட வேளையில் ஜெப ஆலயங்கள் பெருக்கமடைந்த நிகழ்வுடன், ஓய்வுநாளானது இளைப்பாறுதலின் நாளாக இருந்ததுடன் ஆராதனை, பிரமாணத்தை வாசித்தல் ஆகியவற்றிற்கும் உரிய நாள் ஆயிற்று."[1]

இதற்கு முன்பு, இஸ்ரவேலர்கள் ஆராதிப்பதற்கென்று தேவன் அவர்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருந்த எருசலேமில் மட்டுமே ஆராதித்து வந்தனர்.[2] அவர்களுக்குப் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

*கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் கோத்திரங்கள் ஒன்றில் கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில்மாத்திரம் நீ உன் சர்வாங்க தகன பலிகளையிட்டு, நான் உனக்குக் கற்பிக்கிற யாவையும் அங்கே செய்வாயாக (உபா. 12:13, 14).*

லேவியராகமம் 23:2 வசனமானது "சபை கூடிவரும் பரிசுத்த நாட்கள்" பற்றிக் குறிப்பிடுகின்றது. மக்கள் எவ்விடத்தில் அல்லது ஏன் கூட வேண்டும் என்று ஒன்றும் கூறப்படுவதில்லை. ஓய்வுநாள் பாரம்பரியமானது முழு நாட்டையும் அல்லது ஒவ்வொருவரையும் ஒரு பெரிய நகரில் ஒன்று கூடுவதைத் தடை செய்திருக்கும். ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல் பற்றி இஸ்ரவேலருக்குத் தரப்பட்ட கட்டளையானது, "ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன்தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன்தன் ஸ்தானத்திலே இருக்க வேண்டும்" (யாத். 16:29ஆ) என்று எடுத்துரைத்தது.

இந்தக் கட்டளையானது ஒரு வீட்டில் உள்ளவர்கள் கூடி வருதலுடன் மட்டுப்படுத்தியிருக்க வேண்டும். லேவியராகமம் 23:3ல் உள்ள "சபை கூடிவரும் பரிசுத்த நாட்கள்" என்ற சொற்றொடரானது "முழுமையான ஓய்வு" என்பதுடன் இணைவற்றதாக உள்ளது, இது சபை கூடிவரும் பரிசுத்த நாட்கள் என்பது ஓய்வுக்காக வீட்டார் யாவரும் கூடிவரும் வேளை என்று அர்த்தப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

## இயேசுவும் ஓய்வுநாளும்

இயேசு நியாயப்பிரமாணத்தின் கீழ்ப்பட்டவராய்ப் பிறந்தார் (கலா. 4:4). இதன் காரணமாக அவர் ஓய்வுநாள் உட்பட நியாயப் பிரமாணத்தின் கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடித்தார்.

இயேசு ஓய்வுநாளில் குணப்படுத்திய பொழுது, யூதர்கள் தங்களுடைய பாரம்பரியங்களின்படி அவர் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்காதபடியினால் கலவரம் அடைந்தனர். ஓய்வுநாளுக்கும் ஆண்டவர் என்ற வகையில் அவர் ஏழாம் நாள் ஓய்வின் நோக்கத்தைப் புரிந்திருந்தார். ஓய்வுநாளில் அவர் தம் சீஷர்களைக் கோதுமைக் கதிர்கள் கொய்து உண்ண அனுமதித்ததில் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5), அவர் "ஓய்வுநாள் மீது தமக்குள்ள அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். பரிசேயர்கள் அல்ல, அவரே அந்த நாளின் தகுதியான கடைப்பிடித்தல் பற்றிய விதிமுறைகளை ஆள முடிந்திருந்தது."[3]

மேலும் இயேசு ஓய்வுநாளன்று, சூம்பின கையுடைய ஒரு மனிதனைக் குணப்படுத்தினார் (மத். 12:10-13; மாற். 3:1-5; லூக். 6:6-10); கூனியாய் இருந்த ஒரு பெண்ணைக் குணப்படுத்தினார் (லூக். 13:11-16); நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனிதனைக் குணப்படுத்தினார் (லூக். 14:1-5); பெதஸ்தா குளத்தருகில் ஊனமுற்ற ஒரு மனிதனைக் குணப்படுத்தினார் (யோவா. 5:1-18; 7:19-23), அவனை ஓய்வுநாளன்று, அவனது படுக்கையைத் தூக்கிக் கொண்டு செல்லுமாறு கூறினார்; மற்றும் பார்வையற்ற ஒரு மனிதரையும் குணப்படுத்தினார் (யோவா. 9:1-7). அவர் தம்மை விமர்சித்தவர்களிடத்தில், ஓய்வுநாளன்று நன்மை செய்வது சரியானதே (மத். 12:12) என்று சுட்டிக்காட்டினார். மனிதன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது என்று அவர் அறிவித்தார் (மாற். 2:27).

இயேசு ஓய்வுநாளில் குணப்படுத்தியது மட்டுமின்றி, அவர் ஏழாம் நாளில் யூதருடைய ஜெப ஆலயங்களில் போதிக்கவும் செய்தார் (மாற். 1:21; 6:2; லூக். 4:16, 31; 6:6; 13:10). இருப்பினும் அவர் பரிசேயர்களின் பாரம்பரியங்களை மீறியதால் இயேசுவுக்கும் யூதர்களுக்கும் இடையில் போராட்டம் எழுந்தது. "பரிசேயர்கள் ஓய்வுநாளில் எவையெல்லாம் செய்யப்பட முடியும் எவையெல்லாம் செய்யப்பட முடியாது என்பதைத் துல்லியமாக விளக்கப்படுத்த முயற்சி செய்தனர். Mish. *Shabbath* vii. 2ல் ஓய்வுநாளன்று தடை செய்யப்படும் முப்பத்தி ஒன்பது 'முக்கிய பணிகள்' பற்றிய அட்டவணையொன்று அளிக்கப்படுகின்றது ..."[4]

*பரிசேயர்களின் அட்டவணையை இயேசுவும் அவருடைய சீஷர்களும் மீறினர்: தானியக் கதிர்களைக் கொய்வது தடை செய்யப்பட்டிருந்தது (மாற். 2:23, 24), மரண அபாயத்தில் இராதவர்களுக்கு உதவி செய்யவோ அல்லது அவர்களைக் குணப்படுத்தவோ கூடாது (மாற். 3:1), மற்றும் பொருட்கள் தூக்கப்படக் கூடாது (யோவா. 5:9, 10).*[5] ஒரு சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பற்றி விவாதம் செய்யும் பொழுது, பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருவதால் தானும் கிரியைசெய்ததாக இயேசு பதில் அளித்தார் (யோவா. 5:17).

கிறிஸ்தவர்களால் ஓய்வுநாள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று இயேசு சுட்டிக் காண்பித்தாரா? "நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" (மத். 24:20) என்று தம்முடைய சீஷர்களுக்குக் கூறியதில் அவர் இதைச் செய்ததாகச் சிலர் உரிமைகோருகின்றனர். இயேசு இது ஏன் என்று விளக்கம் அளிக்கவில்லை, எனவே நாம் யூகம் செய்ய மட்டுமே முடியும். "ஓய்வுநாள் பயண தூரம்'' பற்றிய பாரம்பரியமானது தூரமாகப் பயணம் செல்வதிலிருந்து அவர்களை விலக்கியிருக்குமா? அல்லது எருசலேமின் வாயிற் கதவுகள் ஓய்வுநாளன்று பூட்டப்பட்டிருப்பதால் அவர்கள் தப்பிச் செல்லுதல் தடை செய்யப்பட்டிருக்குமா? இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் தீவிரமான அபாயத்துக்குள்ளாவார்கள் என்பது அறிவுக்குப் பொருத்தமான காரணமாய் இருக்கலாம். ஓய்வுநாளன்று சுமைகளைத் தூக்கிச் செல்லும் எவரொருவரையும் யூதர்கள் கல்லெறிவார்கள், ஓய்வுநாளன்று விறகுகளைப் பொறுக்கியதற்காகக்கூட ஒரு மனிதன் கல்லெறியப்பட்டான் (எண். 15:32, 36).

> நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து, அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டுபோகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 17:21, 22).

மாரிகாலத்திலோ அல்லது ஓய்வுநாளிலோ ஓடும்படிக்குக் கிறிஸ்தவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால், அவர்களின் ஓட்டமானது இரக்கமற்றதாக இருந்திருக்கும். மாரிகாலம் என்பது குளிரான மற்றும் மழை அல்லது ஒருவேளை பனி விழும் காலமாய் இருக்க முடியும், ஓய்வுநாள் என்பது அவர்கள் யூதர்களின் பாரம்பரியங்களையும் பிரமாணங்களையும் மீறியதற்காக யூதர்களின் தடுத்தல்களைச் சந்திக்க நேர்ந்திருக்கும்.

மாரிகாலம் அல்லது ஓய்வுநாளில் தப்பியோடுதலின் பிரச்சனையைப் பற்றி R. C. H. லேன்ஸ்கி அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> … பலஸ்தீனத்தின் குளிர் மற்றும் ஈரமான மாரிகாலமும் "உங்கள் ஓட்டத்தின்" வேளையினுடைய சாத்தியமும் அந்தப் பருவ காலத்தில்

*ஏற்பட்டிருக்கலாம். அல்லது நாட்டில் மத வைராக்கியம் கொண்ட யூதர்கள் நிறைந்திருக்கும் ''ஓய்வுநாளில்'' அது நடந்திருக்கலாம், அவர்கள் ஓய்வுநாள் கட்டளையை (யாரேனும்) மீறுவதாகக் காணப்பட்டால் மூர்க்கம் அடைவார்கள். அந்த வேளையில், போதிய ஆதாரம் இன்றியே, ஓய்வுநாள் பிரமாணம் பற்றியவை உள்ளிட, யூதருடைய சட்டங்களைக் கிறிஸ்தவர்கள் இன்னமும் ஆசரித்திருப் பார்களா என்பதே இதன் கண்ணோட்டம் ஆகும்.*[6]

D. A. கர்சன் அவர்கள் பின்வருமாறு விளக்கினார்:

*ஓய்வுநாளன்று தப்பியோடுதல் உட்பட எவ்வகையான பயணமும் தவறானது என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார் என்று இது தவறாக அர்த்தப்படுத்தப்படக் கூடாது. அவர், ஓய்வு நாளன்று அவர்கள் தப்பி ஓடுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுவதில்லை, ஆனால் அவர்கள் தப்பி ஓடுவார்கள் என்பதை முன் அனுமானம் செய்த அவர், அவர்களின் அந்த ஓட்டமானது (ஓய்வுநாள் தவிர) வேறொரு நாளில் இருக்க வேண்டும் என்பதற்காக ஜெபிக்கும்படி அவர்களுக்குப் புத்தி புகட்டுகின்றார். பால் கொடுக்கும் தாய்மார்கள் (24:19) மற்றும் மாரிகால மழை, குளிர் (24:20அ) ஆகியவை அவர்களைத் தாமதப்படுத்தும் மற்றும் உயிர் இழக்கக் காரணமாகும், அது போலவே ஓய்வுநாள் கட்டளை முறைமைகளும் செய்யும், ஏனெனில் கதவுகள் மூடப்பட்டு, கடைகள் அடைக்கப்பட்டிருக்கும், மற்றும் ஓய்வு நாளன்று அனுமதிக்கப்படும் பயண தூரத்திற்கும் அதிகமாகச் செல்ல முயற்சிப்பவர்களுக்குத் தடைகள் ஏற்படும்.*[7]

ஓய்வுநாளன்று கிறிஸ்தவர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இயேசு சுட்டிக்காட்டியதாக இந்தக் கூற்றினால் நிரூபிக்கப்பட முடிந்தாலும் கூட, அது ஓய்வுநாளன்று எந்த வேலையும், பயணமும் செய்யக் கூடாது என்று மட்டும் நிரூபிப்பதாகவே இருக்கும். அது கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளன்று ஆராதிக்க வேண்டும் என்பதை நிரூபிப்பதாய் இருக்காது, ஏனெனில் அந்தக் கூற்று ஓய்வுநாளில் - ஆராதிப்பதை அல்ல ஆனால் - பயணம் செய்வதை மட்டுமே குறிப்பிடுகின்றது. மற்றும், அது - புறஜாதிக் கிறிஸ்தவர்கள் அல்ல - யூதக் கிறிஸ்தவர்கள் மட்டுமே ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே நிரூபிக்கும். ஓய்வுநாள் விதிமுறையானது யூதர்களுடைய தேசீய விதிமுறைகளின் பாகமாக இருந்ததேயன்றி, அது இஸ்ரவேல் நாட்டிற்குப் புறம்பே இருந்தவர்களைக் கட்டுப்படுத்தும் விதிமுறையாக இருந்ததில்லை.

ஓய்வுநாளானது என்றென்றைக்கும் நிலைநிற்க வேண்டியதாய் இருந்ததில்லை. இஸ்ரவேலைப் பற்றி ஓசியாவின் மூலமாகத் தேவன், "அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும், அவளுடைய மாதப்பிறப்புகளையும், அவளுடைய ஓய்வுநாட்களையும், சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப் பண்ணு வேன்" (ஓசி. 2:11) என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். ரோமசேனையால்

இஸ்ரவேலர்கள் தோற்கடிக்கப்பட்டு எருசலேம் வீழ்ந்தபோது இந்தத் தீர்க்கதரிசனமானது நிறைவேறியிருக்கலாம் (கி.பி. 70).

## நடபடிகளில் ஓய்வுநாள்

நடபடிகளின் முதல் பதிமூன்று அதிகாரங்களில் ‘‘ஓய்வுநாள் பிரயாணம்’’ (அப். 1:12) பற்றியுள்ள ஒரே ஒரு குறிப்பானது, ஒரு மைலில் ஐந்தில் மூன்று பாகத்திற்கு அதிகமான தூரமோ அல்லது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் இதற்கு இரு மடங்கிற்கு அதிகமான தூரமோ செல்வதை யூதர்களின் பாரம்பரியம் தடை செய்தது என்பதற்கான குறிப்பாக இது உள்ளது. நடபடிகளிலோ அல்லது புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்திலுமோ ஓய்வுநாளன்று கிறிஸ்தவர்கள் ஓய்ந்திருந்ததாகவோ அல்லது ஆராதிக்கக் கூடி வந்ததாகவோ எந்தக் கூற்றும் இல்லை.

ஓய்வுநாளன்று யூதர்கள் கூடி வந்த இடமான ஜெப ஆலயங்களில் பவுல் பிரசங்கித்தார் (அப். 13:14, 42, 44; 16:13; 17:2; 18:4). இருப்பினும், அவர் ஓய்வுநாளன்று சபையுடன் கூடிவந்தார் என்றோ அல்லது சபையானது ஓய்வுநாளன்று கூடிவந்தது என்றோ எவ்விதக் குறிப்பையும் நாம் காண்பதில்லை. மோசேயின் ஆகமங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் ஆகியவை ஓய்வுநாளன்று வாசிக்கப்படும் என்ற யூதர்களின் நடைமுறை பற்றி மறைமுக சுட்டிக்காட்டுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (அப். 15:21; 13:27ஐக் காணவும்).

யூதர்களின் நியாயப்பிரமாணங்களைப் புறஜாதியார் கடைப்பிடிக்க வேண்டியிருந்ததா என்பதை அறிந்து கொள்வதற்காக அப்போஸ்தலர் களையும் மூப்பர்களையும் சந்திப்பதற்காகப் பவுலும் பர்னபாவும் எருசலேமுக்குச் சென்றனர் (அப். 15:1, 2). கிறிஸ்தவர்களாகியிருந்த சில யூதர்கள் புறஜாதியாரைப் பற்றி, ‘‘அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்’’ (அப். 15:5). சற்று விவாதத்திற்குப் பிறகு, பேதுரு “இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின் மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?” (அப். 15:10) என்று எடுத்துரைத்தார். விருத்தசேதனம் பெற்றிருந்து கிறிஸ்வர்களான சிலர் அதைப் புறஜாதிக் கிறிஸ்தவர்கள்மேல் சுமத்த முயற்சித்திருந்தனர், இந்த விருத்தசேதனமும் நியாயப்பிரமாணமுமே பேதுருவினால் குறிப்பிடப் பட்ட நுகத்தடியாய் இருக்க வேண்டும்.

புறஜாதியார் விருத்தசேதனம் பெற்று நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர்களுக்கு (அப். 15:5) பதில் அளிப்பதற்கு யாக்கோபினால் ஆலோசனையாகத் தெரிவிக்கப்பட்ட கடிதத்தில் ‘‘எங்களால் கட்டளை பெறாத சிலர்’’ (அப். 15:24) என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அது தொடர்ந்து, “அவசியமான இவைகளை யல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது” (அப். 15:29) என்று

கூறியது. அவசியமானவைகள் என்பது நியாயப்பிரமாணத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த ஒரு சிலவற்றையே உள்ளடக்கியிருந்தது. அவைகளில் (அவசியமானவைகளில்) விருத்தசேதனமோ, நியாயப் பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொள்வதோ அல்லது ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதோ உள்ளடக்கப்படவில்லை. இது அப்போஸ்தலர் களினாலோ எருசலேமில் இருந்த மூப்பர்களினாலோ அல்லது பரிசுத்த ஆவியானவரினாலோ புறஜாதியார்மேல் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணம் முழுவதுமோ அல்லது ஓய்வுநாளோ சுமத்தப்படவில்லை என்பதற்குத் தெளிவான ஒரு சுட்டிக்காட்டுதலாக உள்ளது. பவுலும் பர்னபாவும், யூதர்களின் நடைமுறைகளைப் புறஜாதிக் கிறிஸ்தவர்கள்மேல் சுமத்துவதற்கான தங்களது மறுப்பை ஐயமறத் தெளிவாக்கியிருந்தனர்.

## பவுலின் எழுத்துக்களில் ஓய்வுநாள்

நியாயப்பிரமாணமானது ஒழிக்கப்பட்டிருந்தது என்பதைப் பவுல் தமது எழுத்துக்களில் உறுதிப்படுத்தினார்.[8] கிறிஸ்தவர்கள், யூதர்களின் விசேஷித்த நாட்களையும் ஓய்வுநாட்களையும் ஆசரிக்கக் கடமைப்பட்டிருப்பதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியதில் அவர், "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக் கப்படுவதில்லையே" (கலா. 2:16); "... நான் ... நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்" (2:19); "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்" (3:10); "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் ... நீதிமானாகிறதில்லை ..." (3:11); "... சந்ததி வருமளவும் அது ... கூட்டப்பட்டு" (3:19); "... நாம் உபாத்திக்கு [நியாயப்பிரமாணத்திற்கு]க் கீழானர்களல்லவே" (3:25); "... நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் [நியாயப்பிரமாணத்தின்] நுகத்துக்குட்படாமல் ..." (5:1, 4:21-31ன் சந்தர்ப்பப் பொருளில்); "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (5:4); மற்றும் "... நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல" (5:18) என்று எடுத்துரைத்தார்.

இந்தக் கூற்றுக்களின் சந்தர்ப்பப் பொருளில் பவுல், "நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்" (கலா. 4:10, 11) என்று எழுதினார். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் யூதர்களின் நடைமுறைகளின் மேல் கவனம் செலுத்தியிருந்தபடியால், அவர் தேவனற்ற மனிதர்களின் விசேஷித்த நாட்கள் எவைகளைப் பற்றியாவது கூறுவதற்கு மாறாக யூதர்களின் விசேஷித்த நாட்களைப் பற்றியே குறிப்பிட்டிருந்திருக்க வேண்டும்.

"நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும்"

என்ற சொல் விளக்கமானது, அநேகமாக மதப் பண்டிகைகள் பற்றிய யூத அமைப்பு முறைமைகளையே குறிப்பிடுவதாக உள்ளது, ஏனெனில் கலாத்தியாவில் இருந்த யூத மார்க்கத்தவர்களே பவுலைப் பலமாக எதிர்த்தார்கள். இது இப்படியிருந்ததென்றால், "நாட்கள்" என்பது ஒரு நாள் மட்டும் ஆசரிக்கப்பட்டிருந்த ஓய்வுநாட்களையும் மற்ற பண்டிகைகளையும் குறிப்பதாகவும், ''மாதங்கள்'' என்பது மாதாந்திரக் கொண்டாட்டங்களை (அமாவாசை போன்றவைகள்; எண் 10:10ஐக் காணவும்) அர்த்தப்படுத்துவதாகவும் இருக்க முடியும்.[9]

> கலாத்தியாவில் இருந்த போராட்டத்தின் கண்ணோக்கில், கலாத்தியர்களை வசீகரித்துக் கொண்டிருந்த ஆசரிப்புகள் யூதர்களின் ஆசரிப்புகளே என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்க முடியும். "நாட்கள்" என்பது ஓய்வுநாட்களைக் குறிப்பதாய் இருக்கும், இது நாட்காட்டியில் குறிப்பிட்ட தேதிகளில் அமைந்திருந்த பண்டிகைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.[10]

கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாகி இருந்தனர் என்றும் அவர்கள் யூதர்களின் பரிசுத்த நாட்களை ஆசரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும் அவர்களுக்குப் பவுல் நினைவூட்டினார்.

கொலோசெயில் இருந்த சபைக்கும் அவர் இதே அறிவுறுத்தலைக் கொடுத்தார்:

> ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது (கொலோ. 2:16, 17அ).

உணவு, பானம், விழாக்கள், விசேஷித்த நாட்களைக் கடைப்பிடித்தல் அல்லது ஓய்வுநாட்களைக் கடைப்பிடித்தல் ஆகியவை பற்றி ஒருவரும் தம்மை நியாயந்தீர்க்க ஒரு கிறிஸ்தவர் அனுமதிப்பதில்லை. இயேசு சிலுவையில் மரித்த பொழுது இவைகளைக் கடைப்பிடிப்பதின் நமது கட்டுப்பாட்டை முடித்து வைத்து விட்டார். அவைகள் "பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருந்தது'' (எபி. 8:5; 10:1ஐக் காணவும்) - அவைகள் இயேசுவினால் கொண்டு வரப்பட்ட உண்மை நிலைகள் வரவிருந்த காலம் வரைக்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அடையாளச் செயல்களாய் மட்டுமே இருந்தன (கொலோ. 2:17; எபி. 9:9, 10ஐக் காணவும்).

''சட்டதிட்டங்கள்'' (கிரேக்கம்: dogmasin) ஒழிக்கப்பட்டன (எபே. 2:15), மற்றும் "கட்டளைகள்" (கிரேக்கம்: dogmasin) சிலுவையில் அறையப்பட்டன (கொலோ. 2:14). இவைகள் மனிதரால் கைக்கொள்ளப்படும்படி முயற்சித்தவர்கள், இவைகளைக் கடைப்பிடிப்பதினால் நீதியைத் தேடியவர்கள் பவுலின் உழைப்பை வீணாக்குவார்கள்.

## முடிவுரை

ஓய்வுநாளன்று வேலை செய்யக் கூடாது என்று யூதர்களின் வரலாறு முழுவதிலும் அவர்களுக்குத் தேவன் மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டியிருந்தது. இருப்பினும், ஓய்வுநாளன்று வேலை செய்தல் அல்லது ஆராதித்தல் பற்றி கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துதலாக ஒரு வார்த்தையும் தரப்பட்டிருக்கவில்லை. புறஜாதியார், ஓய்வுநாள் கடைப்பிடித்தலுக்குப் பழக்கமற்றிருந்த பரம்பரையிலிருந்து வந்தவர்களாய் இருந்ததால், ஓய்வு நாளன்று வேலை செய்யாமல் ஆராதிக்க வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. இவ்வித அறிவுறுத்துதல் எதுவும் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையானது, யூதர்களின் ஓய்வுநாள் என்பது ஒரு இளைப்பாறும் நாளாகவோ அல்லது ஆராதனையின் நாளாகவோ புறஜாதியாருக்கு விதிக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

ஓய்வுநாள் என்பது யூதர்களுக்கு ஒரு விசேஷித்த நாளாக இருந்தது. அந்த நாளில் அவர்கள் எந்த வேலையும் செய்யாதிருந்து, இளைப்பாறி, தங்களைத் தேவன் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து எவ்விதம் விடுதலையாக்கிக் கொண்டு வந்தார் என்பதை நினைவுகூர வேண்டியிருந்தது. தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு அடையாளமாகவும், ஒரு உடன்படிக்கையாகவும் அது இருந்தது. அது ஒருக்காலும் புறஜாதியாருக்கென்று இருக்கவோ அல்லது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கவோ இல்லை, அது கிறிஸ்தவர்களுக்கும் ஒருபொழுதும் கட்டளையிடப்படவில்லை. இப்பொழுது இயேசு வந்துள்ளதால், கிறிஸ்தவர்கள் ஞாயிறுதோறும், இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக எப்படித் தங்களை மரணத்திலிருந்து விடுவித்தார் என்பதை நினைவுகூருவதற்காகக் கூடி வருகின்றனர்.

---

குறிப்புகள்

[1]J. D. Douglas, ed., *The New International Dictionary of the Bible,* gen. ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987). s.v. "Sabbath," by Steven Barabas. [2]யோவா. 4:19-22ல் கிணற்றருகில் சமாரியப் பெண்ணுடன் இயேசுவின் உரையாடலானது தேவனுடைய சித்தம் யூதர்களால் அறியப்பட்டிருந்தது என்பதையும், எருசலேமானது ஆராதிக்கும் இடமாய் இருந்தது என்பதையும் மறைமுகக் கருத்தினால் காண்பிக்கின்றது. [3]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 171. [4]J. C. McCann Jr., "Sabbath," in *The International Standard Bible Encyclopedia,* gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:251. [5]E. Lohse, VII, "*sabbaton,*" in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. and abr. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 991. [6]R. C. H. Lenski, *The Interpretation of St. Matthew's Gospel* (Minneapolis, Minn.: Augsburg Publishing House, 1943), 939-40. [7]D. A. Carson, ed., *From Sabbath to Lord's*

*Day: A Biblical, Historical, and Theological Investigation* (Grand Rapids, Mich.: Academie Books, Zondervan Publishing House, 1982), 73-74. [8]*நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டது என்பது பற்றிய கலந்துரையாடலுக்கு அடுத்த பாடத்தைக் காணவும்.* [9]Daniel C. Arichea Jr. and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letter to the Galatians* (New York: United Bible Societies, 1976), 97. [10]James Montgomery Boice and Merrill C. Tenney, eds., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians,* gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 476.